# ஓசூர் நகராட்சி

நகர்மன்ற கூட்ட அறிக்கை

**2018ஆம்** ஆண்டு **ஏப்ரல் மாதம் 9ம்** தேதி **திங்கட்கிழமை பிற்பகல் 03.00** மணிக்கு **அவசரக் கூட்டம்** புதிய நகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள தனி அலுவலர் அறையில் நடைபெறும். எனவே இரண்டாம் நிலை அலுவலர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தனி அலுவலர்
ஓசூர் நகராட்சி

================================================================================

## <u>மன்றப் பொருள்</u>

**பொருள் எண் 1**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் திருத்தம் செய்து பிரசுரம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.33 நாள்.25.01.2018–ன்படி விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதிப் படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)(சி)–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1)சி–ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1)சி–ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–18 இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1302/2018/அ1)

**பொருள் எண் 2**

ஒசூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள் 576/A1, 576/A2, A3, B1, 577, 590, 591, 592, 594, 595, 597/1, 2, 671/1, 672/1A, 672/1B, 679ல் பரப்பு 7.240 ஹெக்டேர் இடத்தில் அமையும் சிட்கோ தொழிற்சாலை மனைப் பிரிவிற்கு உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் ந.க.எண் 357/2016/ஒபுநவகு நாள் 22.05.2017 கடிதத்தில் தொழில் நுட்ப அனுமதியும், திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. கிளை மேலாளர், சிட்கோ அவர்களின் 13.10.2017ம் தேதிய கடிதத்தில் அரசாணை எண் 157 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 28.08.2017ல் தெரிவித்துள்ளபடி ஒசூர் நகராட்சிக்கு சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை ஒப்படைக்க தேவையில்லை என தெரிவிக்கப்பட்டதால், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் கடிதத்தில் பார்வை 18ல் சுட்டிய அரசு கடிதத்தில் மனைப் பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை அபிவிருத்தி செய்து ஒரு வருட காலத்திற்குள் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று நிபந்தனை தெரிவித்துள்ளதால் அரசாணையின்படி மேற்படி மனைப் பிரிவிற்கு திருத்திய உத்திரவு வழங்குமாறு இவ்வலுவலக ந.க.எண் 7613/2014/எப்1 நாள் 30.10.2013ம் தேதிய கடிதத்தில் உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் 05.02.2018ம் தேதிய ந.க.எண் 1669/2017/ஒபுநவகு கடிதத்தில் அரசாணை எண் 157 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 28.08.2017 அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் 02.05.2017ம் தேதிய கடிதத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப் பிரிவிற்கு சிறப்பு நிபந்தனையை தளர்த்தி மேற்படி அரசாணையின்படி மனைப் பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் ஆகியவற்றை சிப்காட்/சிட்கோ நிறுவனங்களே தங்கள் பராமரிப்பில் கொள்ளலாம் என தெரிவித்து மேற்படி மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம் என தெரிவித்துள்ளதால், மேற்படி மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அரசாணை எண் 157 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 28.08.2017ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, மனைப் பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் அந்தந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் மற்றும் சாலைகள் பொது சாலைகளாகும் என்ற நிபந்தனையின் பேரில் இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண் 3**

அரசாணை (நிலை) எண் 109 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்ஏ2) துறை நாள் 29.08.2016ல் அம்ருத் 2015–16ன் கீழ் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக ரூ.87.91 கோடி ஒதுக்கீடு செய்து (மத்திய அரசின் பங்காக ரூ.43.96 கோடியும், மாநில அரசின் பங்காக ரூ.17.58 கோடியும், நகராட்சியின் பங்கு ரூ.26.37 கோடியும்) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்குட்பட்ட மொத்தம் அக்ரஹாரம் கிராம புல எண் 25/3 விஸ்.0.33.5 ஹெக்டேர் தீ.ஏ.த பாறை புறம்போக்கு நிலத்தில் 0.10.80 ஹெக்டேர் நிலத்தில் மேற்படி திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க மேற்படி நிலத்தினை ஆணையாளர், ஒசூர் நகராட்சி என்ற பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்து தர மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3340/2017/எப்1

தனி அலுவலர்
ஒசூர் நகராட்சி

2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்

தலைமை – திரு.ம.செந்தில் முருகன்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், ஒசூர் நகராட்சி

| பொருள் எண் | தீர்மான எண் | கூட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | 165 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 166 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 167 | அனுமதிக்கப்பட்டது |

(ஒம்) எம்.செந்தில் முருகன்
தனி அலுவலர்
ஒசூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஒசூர் நகராட்சி

# ஒசூர் நகராட்சி

நகர்மன்ற கூட்ட அறிக்கை

**2018ஆம்** ஆண்டு **ஏப்ரல் மாதம் 30ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 03.00** மணிக்கு **சாதாரணக் கூட்டம்** புதிய நகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள தனி அலுவலர் அறையில் நடைபெறும். எனவே இரண்டாம் நிலை அலுவலர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தனி அலுவலர்
ஒசூர் நகராட்சி

================================================================================

## <u>மன்றப் பொருள்</u>

**பொருள் எண் 1**

ஒசூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது பற்றிய விளம்பரத்தினை முன்னணி நாளிதழில்களில் வெளியிட விளம்பரக் கட்டணம் தோராயமாக ரூ.50000/– செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 2**

ஒசூர் நகராட்சி அனைத்து வார்டுகளிலும் ஏற்கனவே காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டு பிறகு சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டது. சொத்து வரி விதிக்கப்பட்ட காலிமனை வரி விதிப்பு எண்களை கணினியில் நீக்கம் செய்யப்பட்டது. நீக்கம் செய்யப்பட்ட காலிமனை வரிவிதிப்பு எண்களுக்கு 2018–19 ஆம் ஆண்டு முதல் கேட்பு கணினியில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள ஆண்டுகளுக்கு தொகை ரூ.1,04,64,506/–ஐ Write off செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 3**

கிருஷ்ணகிரி மாவட்டம், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டுவாரியான வாக்காளர் விபரம் தயார் செய்திட 10.01.2018 அன்று வெளியிடப்பட்ட சட்டமன்ற தொகுதிக்கான ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் மற்றும் துணை வாக்காளர் பட்டியல்–I ஆகியவற்றை 2 செட் ஒளி நகல் எடுத்து புத்தக வடிவில் தைத்து வழங்க கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளதை, ஒப்பு நோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | விலைப்புள்ளி வரப் பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் தொகை (ரூபாய்) | | |
|---|---|---|---|---|
| | | M/s.Shanti Prints, Hosur | M/s.Balaji Achagam, Hosur | M/s.Sri Jothimani Printers & Binder, Hosur |
| 1 | 10.01.2018 அன்று வெளியிடப்பட்ட சட்டமன்ற தொகுதிக்கான ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் மற்றும் துணை வாக்காளர் பட்டியல்–I (உள்ளது உள்ளபடி ஒளி நகல் 2 செட் எடுத்தல்) (1 செட் 8192 பக்கங்கள்) (மொத்தப்பக்கங்கள் 16384) | ரூ.24576/– | 28672/– | 20480/– |
| 2 | 10.01.2018 அன்று வெளியிடப்பட்ட | ரூ.6000/– | ரூ.5700/– | ரூ.5250/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டமன்ற தொகுதிக்கான ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் மற்றும் துணை வாக்காளர் பட்டியல்–I புத்தக வடிவில் 2 செட் தைத்து (Binding) வழுங்குதல் (1 செட் 15 புத்தகங்கள்) | | | |

வரப் பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய மெஸர்ஸ் ஜோதிமணி பிரிண்டர்ஸ் மற்றும் பைண்டர்ஸ், ஒசூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1721/2016/சி2

**பொருள் எண் 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் 2010ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து நிலையம் பெங்களூரு – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் (NH 7) அமைந்துள்ளது. ஒசூர் நகரம் கர்நாடக மாநிலத்தின் நுழைவு பகுதியாக உள்ளது. இந்நகரத்தில் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளதாலும், அருகிலுள்ள கிராமப் பகுதிகளில் பூக்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதால், பேருந்து நிலையத்தில் எப்பொழுதும் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. மேலும் பூ வியாபாரிகள் பூக்களை தேசிய நெடுஞ்சாலையின் இருபுறம் சிறுசிறுகடைகள் அமைத்து வியாபாரம் செய்து வருவதாலும், நடைபாதை வியாபாரிகளின் கடைகளாலும், மேற்படி சாலையில் வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு பொதுமக்களை ஏற்றி இறக்கி வருவதாலும், சாலை ஓரங்களில் நெடுநேரம் மேற்படி வாகனங்களை நிற்க வைப்பதால், பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் சாலையில் நிற்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடைஞ்சலாக உள்ளது.

இந்நகராட்சி பேருந்து நிலையத்திற்கு அருகில் சர்வே எண் 821/1, வார்டு 'D' பிளாக் 11, நகரளவு எண் 39–ல் 1.1450 ஹெக்டேர் நிலம் அருள்மிகு காளிகாம்பா கோவில் சொந்தமான இந்து அறநிலையத் துறையின் இடமாகும். எனவே மேற்படி இடத்தில் பொதுமக்களின் நலன் கருதி, தேசிய நெடுஞ்சாலையில் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள கடைகளை அப்புறப்படுத்தி, மேற்படி இடத்தில் அப்புறப்படுத்தப்பட்ட கடைகளை வைத்துக் கொள்ளவும், வாகன நிறுத்துமிடமாக பயன்படுத்தவும் மேற்படி இடத்தினை அரசால் நிர்ணயம் செய்யப்படும் குத்தகைத் தொகை அடிப்படையில் நகராட்சிக்கு வழங்க கோரி, மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்களின் மூலமாக அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி இடத்தினை குத்தகை அடிப்படையில் நகராட்சிக்கு வழங்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் மூலமாக அரசுக்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 5**

ஒசூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.1 முதல் 25 வரையிலுள்ள 14 நகராட்சி தொடக்கப்பள்ளிகள், 4 நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை தனியார் நிறுவனங்கள் மூலம் பராமரிக்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.40.00 லட்சத்திற்கும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 26.04.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | திரு.சி.இளையபெருமாள்,<br>ஒப்பந்ததாரர்,<br>5/547, 100 அடி ரிங் ரோடு,<br>முனிஸ்வர் நகர்,<br>ஒசூர் | ரூ.3878354/– |
| 2 | திரு.பி.விஷ்வணாதன்,<br>ஒப்பந்ததாரர்,<br>வள்ளுவர் நகர்,<br>ஒசூர் | ரூ.3897098/– |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.இளையபெருமாள், ஒப்பந்ததாரர், 5/547, 100 அடி ரிங் ரோடு, முனிஸ்வர் நகர், ஒசூர் என்பவர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3250/2016/எச்1)

**பொருள் எண் 6**

ஒசூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.26 முதல் 45 வரையிலுள்ள 13 நகராட்சி தொடக்கப்பள்ளிகள், 2 நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை தனியார் நிறுவனங்கள் மூலம் பராமரிக்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.36.00 லட்சத்திற்கும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 26.04.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | திரு.சி.இளையபெருமாள்,<br>ஒப்பந்ததாரர், 5/547, 100 அடி ரிங் ரோடு,<br>முனிஸ்வர் நகர், ஒசூர் | ரூ.3496500/– |
| 2 | திரு.பி.விஷ்வணாதன்,<br>ஒப்பந்ததாரர், வள்ளுவர் நகர், ஒசூர் | ரூ.3513540/– |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி.இளையபெருமாள், ஒப்பந்ததாரர், 5/547, 100 அடி ரிங் ரோடு, முனிஸ்வர் நகர், ஒசூர் என்பவர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3250/2016/எச்1)

**பொருள் எண் 7**

இந்நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக 46 கடைகளில் 14 கடைகள் நகராட்சி அபிவிருத்திப் பணிகளுக்காக காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைக்க 14 கடைகளின் குத்தகைதாரர்களுக்கு 18.05.2012ல்

அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதனை எதிர்த்து கீழ்காணும் 9 கடைகளின் குத்தகைதாரர்கள் கடைகளை காலி செய்து தர மறுப்பு தெரிவித்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் | வழக்கு எண் | கடை எண் |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.முனி கிருஷ்ணன் | W.P. No.15117/2012 | 01 |
| 2 | திரு.கே.ஆர்.ஸ்ரீ ராம் | W.P. No.15118/2012 | 06 |
| 3 | திரு.கி.விஜய குமார் | W.P. No.15119/2012 | 02 |
| 4 | திரு.டி.சுப்பிரமணி | W.P. No.15120/2012 | 16 |
| 5 | திரு.எஸ்.எம்.கோபால் ரெட்டி | W.P. No.15121/2012 | 04 |
| 6 | திருருடி.ஹாசன் | W.P. No.15122/2012 | 07 |
| 7 | திரு.எம்.முனிகிருஷ்ணன் | W.P. No.15123/2012 | 18 |
| 8 | திரு.சுப்பிரமணி | W.P. No.15124/2012 | 03 |
| 9 | திரு.சி.விஜய குமார் | W.P. No.15125/2012 | 17 |

இவ்வழக்குகளுக்கு வழக்கறிஞர் திரு.என்.சுப்பராயலு அவர்களின் 24.01.2018ம் நாளைய கடிதத்தில் ஒரு வழக்கிற்கு ரூ.5,000/– வீதம் 9 வழக்குகளுக்கு ரூ.45,000/– வழங்க கோரியுள்ளார். எனவே வழக்கறிஞர் திரு.என்.சுப்பராயலு அவர்களுக்கு மேற்படி தொகை ரூ.45,000/– வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2634/2007/அ3

**பொருள் எண் 8**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.45 நாள்.31.01.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 09.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் : - நகராட்சி ஆழ்துளை கிணறுகளின் பயன்பாட்டிற்காக மாற்று மின்மோட்டார்கள் சப்ளை செய்தல்.

மதிப்பீடு : - ரூ.6.60 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s பாலாஜி டிரேடர்ஸ் | 0.11 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s சீனிவாசா எண்டர்பிரைசஸ் | 0.17 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.11 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s பாலாஜி டிரேடர்ஸ் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 9**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.43 நாள்.31.01.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 09.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் : - நகராட்சி ஆழ்துளை கிணறுகளின் மின் பயன்பாட்டிற்காக தேவைப்படும் மின் உபகரணங்கள் சப்ளை செய்தல்.

மதிப்பீடு : - ரூ.9.00 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s பாலாஜி டிரேடர்ஸ் | 0.14 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s சீனிவாசா எண்டர்பிரைசஸ் | 0.23 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.14 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s பாலாஜி டிரேடர்ஸ் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 10**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.47 நாள்.31.01.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 09.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் : நகராட்சி குடிநீர் பயன்பாட்டிற்காக Liquid Chlorination சப்ளை செய்தல்.

மதிப்பீடு : - ரூ.9.50 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s பாலாஜி டிரேடர்ஸ் | 0.28 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s சீனிவாசா எண்டர்பிரைசஸ் | 0.30 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.28 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s பாலாஜி டிரேடர்ஸ் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 11**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.84 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 10.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

விவரம்

பணியின் பெயர் :- வார்டு எண்.18, நியூ ஏ.எஸ்.டி.சி ஹட்கோ பகுதியில் நுண்ணுயில் செயலாக்க மையத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல்.

மதிப்பீடு :- ரூ.6.00 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.M.செந்தில் குமார் | 0.27 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி.C.ரேவதி | 0.29 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.27 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.செந்தில் குமார் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 12**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.85 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 16.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

விவரம்

பணியின் பெயர் :- வார்டு எண்.5, ஆனந்த் நகர் நுண்ணுயிர் செயலாக்க மையத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல்.

மதிப்பீடு :- ரூ.6.00 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.M.செந்தில் குமார் | 0.27 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி.C.ரேவதி | 0.29 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.27 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.செந்தில் குமார் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 13**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.86 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 16.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் :- வார்டு எண்.3, பேடரப்பள்ளி பகுதியில் சிறுபாலத்தின்ன இடது மற்றும் வலது புறத்தில் உள்ள அணுகு சாலையினை இணைத்து பாலத்தின் நான்கு புறத்திலும் பக்கவாட்டு சுவர்கள் அமைத்தல்.

மதிப்பீடு :- ரூ.9.00 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.L.சுப்பிரமணி | 0.25 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. விஸ்வநாதன் | 0.28 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.25 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.L.சுப்பிரமணி என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 14**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.87 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 16.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் :- வார்டு எண்.36 மற்றும் 37 ராயக்கோட்டை ஹவுசிங் போர்டு பகுதியில் கழிவுநீர் குழாய்களை மாற்றியமைத்தல்.

மதிப்பீடு :- ரூ.8.25 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.L.சுப்பிரமணி | 0.24 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. விஸ்வநாதன் | 0.26 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.24 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.P. விஸ்வநாதன் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 15**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.88 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 16.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் :- இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் அருகில் உள்ள அம்மா உணவகத்திற்குபாய்லர், குடிநீர் சுத்திகரிப்பு மற்றும் பில்லிங் மிஷின் புதியதாக மாற்றியமைத்தல்.

மதிப்பீடு :- ரூ.7.60 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.M.செந்தில் குமார் | 0.16 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திருமதி.C.ரேவதி | 0.21 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.16 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.செந்தில் குமார் என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்எண் 16**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.89 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி .201 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் :- மிடுகரப்பள்ளி பகுதியில் புதிய நியாய விலை கட்டிடம் கட்டுதல்.

மதிப்பீடு :- ரூ.5.00 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.L.சுப்பிரமணி | 0.23 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. விஸ்வநாதன் | 0.27 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.23 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.L.சுப்பிரமணி என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 17**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.74 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 28.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் :- காமராஜ் காலனி 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு Gas Chlorination Plant அமைத்தல்.

மதிப்பீடு :- ரூ.9.90 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s R.K Enterprises | 0.20 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s Micro Tech Engineering | 0.25 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s R.K Enterprises என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 18**

ஒசூர் நகராட்சியில் கீழ்கண்ட குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.81 நாள்.12.02.2018ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி 28.03.2018 தேதியன்று ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலிட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>விவரம்</u>

பணியின் பெயர் :- காமராஜ் காலனி 29.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஈரடுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு Gas Chlorination Plant அமைத்தல்.

மதிப்பீடு :- ரூ.9.90 இலட்சம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s R.K Enterprises | 0.20 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s Micro Tech Engineering | 0.25 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் M/s R.K Enterprises என்ற ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்று கொள்ளலாம்.

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 19**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மண்டலம்–1ல் உள்ள TN24 V1959 எண்ணிட்ட குப்பை அள்ளும் மினிலாரிக்கு தகுதி சான்று பெற வேண்டி, வாகனத்தை பழுது பார்த்து கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.188000/–க்கும், மேற்படி பழுது பார்க்கும் பணிக்கு 6.4.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | உரிமையாளர்,<br>J.V.K.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>279, கலரம்பட்டி மெயின் ரோடு, சேலம். | ரூ.187800/– |
| 2 | உரிமையாளர்,<br>யோகா மோட்டடர்ஸ்,<br>103 சி1, தமிழ் சங்கம் ரோடு, ராஜாராம் நகர், சேலம். | ரூ.201000/– |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் உரிமையாளர், J.V.K.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 279, கலரம்பட்டி மெயின் ரோடு, சேலம் என்பவர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.286/2018/எச்1)

**பொருள் எண் 20**

அரசாணை எண்.77 பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை, நாள்.13.4.2015 மற்றும் அரசாணை எண்.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்ஏ4) துறை, நாள்.23.11.2016 ஆகிய அரசாணைகளில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நகராட்சி தொடக்க, நடுநிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை நகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், இப்பராமரிப்பு பணிகளை பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் தலைமையாசிரியரால் தினசரி ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும், இப்பராமரிப்பு பணிகளுக்கான செலலினத்தை கல்வி நிதியிலிருந்து செலவிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி ஓசூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 27 நகராட்சி தொடக்கப்பள்ளிகள், 6 நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை பராமரிக்க இந்நகராட்சியில் போதுமான நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாததால், மேற்படி பராமரிப்பு பணிகளை சேவை வழங்கும் தனியார் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளவும், இப்பராமரிப்பு பணிகளுக்கான செலலினத்தை கல்வி நிதியிலிருந்து செலவிடவும், இப்பராமரிப்பு பணிகளை கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. நகராட்சியிலுள்ள 27 தொடக்கப்பள்ளிகள், 6 நடுநிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள கழிப்பிடங்களை பராமரிக்க போதுமான நிரந்தர துப்புரவு பணியாளர்கள் இல்லாததால், சேவை வழங்கும் தனியார் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம்.
2. மேற்படி 27 நகராட்சி தொடக்கப்பள்ளிகளின் கழிப்பிடங்களை பராமரிக்க 50 தினக்கூலி பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளலாம்.
3. மேற்படி 6 நகராட்சி நடுநிலைப்பள்ளிகளின் கழிப்பிடங்களை பராமரிக்க 12 தினக்கூலி பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளலாம்.
4. பார்வை 4ல் காணும் செயல்முறைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயக்கப்பட்ட தினக்கூலியின்படி நாள் ஒன்றுக்கு ரூ.302/– ( இபிஎப், சேவைக்கட்டணம் உட்பட) வீதம் மேற்படி தினக்கூலி பணியாளர்களுக்கு வழங்கலாம்.
5. பள்ளி கழிவறைகளின் துப்புரவு குறித்து உரிய தலைமையாசிரியர்களை கலந்தாலோசிக்கலாம். மேற்படி தினக்கூலி பணியாளர்களின் வருகை மற்றும் பணிகளை கண்காணிக்க தலைமை ஆசிரியர்களுக்கு பொறுப்பு அளிக்கலாம்.
6. மேற்படி துப்புரவு பணிக்கு தேவையான உபகரணங்கள்/பொருட்கள் மற்றும் தினக்கூலி பணியாளர்களின் தினக்கூலி ஆகியவற்றிற்கான ஒரு வருட தோராய செலவினம் ரூ.76.00 லட்சத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3250/2016/எச்1)

**பொருள் எண் 21**

ஓசூர் நகராட்சியுடன் இணைந்துள்ள ஜூஜூவாடி, ஆவலப்பள்ளி, மூகண்டப்பள்ளி, சென்னத்தூர், மத்திகிரி ஆகிய பகுதிகளிலுள்ள வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தினமும் வீடுவீடாக சென்று குப்பைகளை பிரித்து வாங்குவதற்கும் கால்வாய்களை தூர் வாரவும் தெருக்களை சுத்தம் செய்யவும், தினமும் சேகரிக்கும் குப்பைகளை நகரிலுள்ள 11 சிறிய உரம் தயாரிக்கும் மையங்களில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து அவற்றை உரமாக்கும் பணியினை செய்யவும் ஆட்கள் இல்லாத காரணத்தால் இப்பணிகளை சுயஉதவிக்குழுக்கள் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10955/2008/பி4 நாள்.04.11.2011ல் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1583/2017/இ2 நாள்.23.06.2017ல் 2017–18ம் ஆண்டிற்கு முழு நேர துப்புரவு பணியாளருக்கு ஒரு நாளைக்கான தினக்கூலி ரூ.242/– என்ற அடிப்படையிலும், ஓட்டுனருக்கு ஒரு நாளைக்கான தினக்கூலி ரூ.343/– என்ற அடிப்படையிலும் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்பேரில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தினமும் வீடுவீடாக சென்று குப்பைகளை பிரித்து வாங்குதல் (Door to Door collection), கால்வாய்களை தூர் வாருதல், தெருக்களை சுத்தம் செய்தல், 11 சிறிய உரம் தயாரிக்கும் மையங்களில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து அவற்றை உரமாக்கும் பணியினை செய்தல் போன்ற முதன்மை பணிகளை (Primary Collection) 1.1.2018 முதல் 31.3.2018 வரை மேற்கொள்ளும்படி கீழ்கண்ட சுயஉதவிக்குழுக்களுக்கு செயல்முறைகளின் மூலம் உத்தரவிடப்பட்டது.

1. மண்டலம் 1 – மகாத்மா காந்தி பெண்கள் (ம) ஆண்கள் சுயஉதவிக்குழு– 20 நபர்கள்
2. மண்டலம் 1 – ஏ.பி.ஜே.அப்துல் கலாம் ஆண்கள் (ம) பெண்கள் சுயஉதவிக்குழு– 20 நபர்கள்
3. மண்டலம் 2 – அறிஞர் அண்ணா மகளிர் (ம) ஆண்கள் சுயஉதவிக்குழு– 20 நபர்கள்
4. மண்டலம் 2 – முல்லை ஆண்கள் (ம) பெண்கள் சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
5. மண்டலம் 3 – மறுமலர்ச்சி சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
6. மண்டலம்–3–மலர் சுயஉதவிக்குழு, பார்வதி நகர், ஒசூர் – 20 நபர்கள்
7. மண்டலம் 3,8– மரகதம் சுயஉதவிக்குழு, கிருஷ்ணப்பா நகர், ஒசூர் – 20 நபர்கள்
8. மண்டலம் 3,8– ஜெயம் சுயஉதவிக்குழு, 2, பிடபள்யுடி கோட்ரஸ், தின்னூர், ஒசூர் – 20 நபர்கள்
9. மண்டலம் 4 – வீரசிவாஜி ஆண்கள் மற்றும் பெண்கள் சுயஉதவிக்குழு– 20 நபர்கள்
10. மண்டலம் 4 – சந்திரசூடேஸ்வர் சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
11. பேருந்து நிலையம் – இந்திராகாந்தி மகளிர் சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
12. மண்டலம் 8 – தேவி மகளிர் சங்கம், மத்திகிரி – 25 நபர்கள்
13. மண்டலம் 9 – காமராஜர் மகளிர் (ம) ஆண்கள் சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
14. மண்டலம் 9 – சுபாஸ் சந்திரபோஸ் மகளிர் (ம) ஆண்கள் சுயஉதவிக்குழு– 20 நபர்கள்
15. மண்டலம் 9 – தாமரை ஆண்கள் (ம) பெண்கள் சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
16. மண்டலம் 10 – நேதாஜி சுபாஷ் சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
17. மண்டலம் 6,10 – இராஜாஜி சுயஉதவிக்குழு – 20 நபர்கள்
18. மண்டலம் 10 – நேரு ஆண்கள் (ம) பெண்கள் சுயஉதவிக்குழு – 20 நபர்கள்

------------

365 நபர்கள்

------------

தற்போது துப்புரவு ஆய்வர்களின் குறிப்பில் கோரியுள்ளவாறு, மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தினமும் வீடுவீடாக சென்று குப்பைகளை பிரித்து வாங்குதல் (Door to Door collection), கால்வாய்களை தூர் வாருதல், தெருக்களை சுத்தம் செய்தல், 11 சிறிய உரம் தயாரிக்கும் மையங்களில் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து அவற்றை உரமாக்கும் பணியினை செய்தல் போன்ற முதன்மை பணிகளை (Primary Collection) மேற்கண்ட சுய உதவிக்குழுக்கள் மூலம் மேற்கொள்ளவும், இப்பணிகளை 1.4.2018 முதல் 30.9.2018 வரை மேற்கொள்ளவும், மேற்படி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயக்கப்பட்ட 2017–18ம் ஆண்டின் ஒரு நாளைக்கான தினக்கூலி ரூ.242/– என்ற அடிப்படையில் தொகை வழங்கவும், இந்நகராட்சியில் புதியதாக வாங்கப்பட்ட 21 ஆட்டோக்கள் ( 15 டீசல் ஆட்டோக்கள், 6 பேட்டரி ஆட்டோக்கள் ) ஆகியவற்றிற்கு ஓட்டுனர்கள் இல்லாததால், மேற்படி சுயஉதவிக்குழுக்களிலுள்ள ஓட்டுனர் உரிமம் பெற்ற தகுதியான நபர்களை கொண்டு இயக்கவும், மேற்படி 21 ஓட்டுனர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயக்கப்பட்ட 2017–18ம் ஆண்டின் ஒரு நாளைக்கான தினக்கூலி ரூ.343/– என்ற அடிப்படையில் தொகை வழங்கவும், அதற்காகும் மொத்த தோராய செலவினம் ரூ.165.60 லட்சத்திற்கும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

( ந.க.எண்.1940/2010/எச்1 )

**பொருள் எண் 22**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம் 5க்குட்பட்ட வார்டு எண்.28,29,30,31 மற்றும் மண்டலம்–1க்குட்பட்ட வார்டு எண்.6,7,8,9,10,11 ஆகிய பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பகுதிகளில் குப்பைகளை அள்ளும் பணிகளை செய்ய வாடகை அடிப்படையில் மூன்று தனியார் டிராக்டர்களை வழங்க ஆவண செய்யுமாறு குறிப்பின் மூலம் சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வர்கள் கோரியுள்ளனர்.

சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வர்களின் குறிப்பில் கோரியுள்ளவாறு, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம் 5க்குட்பட்ட வார்டு எண்.28,29,30,31 மற்றும் மண்டலம்–1க்குட்பட்ட வார்டு எண்.6,7,8,9,10,11 ஆகிய பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பகுதிகளில் குப்பைகளை அள்ளும் பணிகளை செய்ய வாடகை அடிப்படையில் மூன்று தனியார் டிராக்டர்களை அமர்த்தி கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.5.32 லட்சத்திற்கும், மேற்படி பணியினை 1.4.2018 முதல் 30.9.2018 வரை செய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | தனியார் டிராக்டர் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | நாள் ஒன்றுக்கு வாடகை வீதம் |
|---|---|---|---|
| 1 | 1 | திரு.எம்.பூபாலன்,<br>2/1096பி, பஸ்தி, ஓசூர்.<br>TN70 F8365 டிராக்டர். | ரூ.1450/– |
| 2 | 5 | திரு.எஸ்.வெங்கடேஷ்,<br>2/77, வெங்கடேஷ் நகர்,<br>ஓசூர்.<br>TN23 AY4120 டிராக்டர். | ரூ.1450/– |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9781/2013/எச்1
ந.க.எண்.3843/2013/எச்1

**பொருள் எண் 23**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம்–4க்குட்பட்ட வார்டு எண்.18,19,20,32,33குட்பட்ட பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பகுதிகளில் குப்பைகளை அள்ளும் பணிகளை செய்ய வாடகை அடிப்படையில் ஒரு டிராக்டரை வழங்க ஆவண செய்யுமாறு குறிப்பின் மூலம் சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வர் கோரியுள்ளார்.

துப்புரவு ஆய்வரின் குறிப்பில் கோரியுள்ளவாறு, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம்–4க்குட்பட்ட பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க வாடகை அடிப்படையில் ஒரு தனியார் டிராக்டரை அமர்த்தி கொள்ளவும், மேற்படி பணியினை 1.4.2018 முதல் 30.9.2018 வரை செய்யவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.2.93 லட்சத்திற்கும், இந்நகரமன்ற தீர்மானம் எண்.21 நாள்.5.2.2016ல் நாள் ஒன்றுக்கு ஒரு டிராக்டருக்கான வாடகை ரூ.1600/– என்ற குறைவான விலைப்புள்ளி அடிப்படையில் திரு.எஸ்.வெங்கடேஷ், 96, அலசநத்தம் ரோடு, ஓசூர் என்பவர் மூலம் மேற்படி பணியினை செய்து கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.9781/2013/எச்1)

**பொருள் எண் 24**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம்–3,8 மற்றும் மண்டலம்–9க்குட்பட்ட பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பகுதிகளில் குப்பைகளை அள்ளும் பணிகளை செய்ய வாடகை அடிப்படையில் ஒரு டிராக்டரை வழங்க ஆவண செய்யுமாறு குறிப்பின் மூலம் சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வர் கோரியுள்ளார்.

சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வர்களின் குறிப்பில் கோரியுள்ளவாறு, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம் 3,8 மற்றும் மண்டலம்–9க்குட்பட்ட பகுதிகளில் சேகரித்த குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சேர்க்க போதிய வாகனங்கள் இல்லாத காரணத்தால் பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பகுதிகளில் குப்பைகளை அள்ளும் பணிகளை செய்ய வாடகை அடிப்படையில் இரண்டு தனியார் டிராக்டர்களை அமர்த்தி கொள்ளவும், மேற்படி பணியினை 1.4.2018 முதல் 30.9.2018 வரை செய்யவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.5.86 லட்சத்திற்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் | தனியார் டிராக்டர் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி | நாள் ஒன்றுக்கு வாடகை வீதம் |
|---|---|---|---|
| 1 | 3,8 | திரு.ஆவல்ரெட்டி த/பெ.திம்மரெட்டி, 96, திம்மசந்திரம் கிராமம், ஆவலப்பள்ளி போஸ்ட் TN24 X4271 டிராக்டர். | ரூ.1600/– |
| 2 | 9 | திரு.ஆவல்ரெட்டி த/பெ.திம்மரெட்டி, 96, திம்மசந்திரம் கிராமம், ஆவலப்பள்ளி போஸ்ட் TN70 B8934 டிராக்டர். | ரூ.1600/– |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.9781/2013/எச்1)

**பொருள் எண் 25**

ஒசூர் நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி.வாகனத்தை இயக்க போதிய நபர் இல்லாத காரணத்தால், ஒரு ஆப்ரேட்டரை கொண்டு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் வைத்துக் கொள்ளவும், இப்பணியினை 1.1.2018 முதல் 31.3.2018 வரை மேற்கொள்ளவும், இந்நகர மன்ற தீர்மானம் எண்.511 நாள்.31.12.2014ல் அனுமதிக்கப்பட்ட ஒரு ஆப்ரேட்டருக்கான ஒரு மாதத்திற்கான குறைந்த ஒப்பந்தப்புள்ளியான ரூ.12500/–யை கொடுத்துள்ள கே.பெருமாள் எர்த் மூவர்ஸ், 59/5, உமாசங்கர் நகர், ஒசூர் என்பவருக்கு வழங்க இவ்வலுவலக செயல்முறைகளின் மூலம் உத்தரவிடப்பட்டது.

துப்புரவு ஆய்வரின் குறிப்பில் கோரியுள்ளவாறு, மேற்கண்ட ஜே.சி.பி.வாகனத்தை இயக்க ஒரு ஆப்ரேட்டரை கொண்டு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் வைத்துக் கொள்ளவும், இப்பணியினை 2.4.2018 முதல் 30.9.2018 வரை மேற்கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.75000/–க்கும், இந்நகர மன்ற தீர்மானம் எண்.511 நாள்.31.12.2014ல் அனுமதிக்கப்பட்ட ஒரு ஆப்ரேட்டருக்கான ஒரு மாதத்திற்கான குறைந்த ஒப்பந்தப்புள்ளியான ரூ.12500/–யை கொடுத்துள்ள கே.பெருமாள் எர்த் மூவர்ஸ், 59/5, உமாசங்கர் நகர், ஒசூர் என்பவரிடமே மேற்படி பணியை ஒப்படைக்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சி ஜே.சி.பி.வாகனத்தை இயக்க ஒரு ஆப்ரேட்டரை கொண்டு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் வைத்துக் கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.75000/–க்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகர மன்ற தீர்மானம் எண்.511 நாள்.31.12.2014ல் அனுமதிக்கப்பட்ட கே.பெருமாள் எர்த் மூவர்ஸ், 59/5, உமாசங்கர் நகர், ஒசூர் என்பவரிடமே மேற்படி பணியினை ஒப்படைக்கவும், மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.3037/2012/எச்1)

**பொருள் எண் 26**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மண்டலம்—3ல் உள்ள TN70 L5047 எண்ணிட்ட நாய் ஆட்டோவுக்கு தகுதி சான்று பெற வேண்டி, வாகனத்தை பழுது பார்த்து கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.64000/—க்கும், மேற்படி பழுது பார்க்கும் பணிக்கு 6.4.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | உரிமையாளர்,<br>J.V.K.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>279, கலரம்பட்டி மெயின் ரோடு, சேலம். | ரூ.63800/— |
| 2 | உரிமையாளர்,<br>யோகா மோட்டடர்ஸ்,<br>103 சி1, தமிழ் சங்கம் ரோடு, ராஜாராம் நகர்,<br>சேலம். | ரூ.68400/— |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் உரிமையாளர், J.V.K.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், 279, கலரம்பட்டி மெயின் ரோடு, சேலம் என்பவர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.286/2018/எச்1)

**பொருள் எண் 27**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மண்டலம்—8ல் உள்ள TN24 V1877 எண்ணிட்ட குப்பை அள்ளும் டிராக்டரில் இருந்த முன்பக்க டயர்கள் மிகவும் பழுதடைந்து விட்டதாகவும், மேற்படி பழுதடைந்த டயர்களை மாற்றி புதியதாக இரண்டு முன்பக்க டயர்கள், டியுப்கள் வாங்கி வழங்குமாறு சம்மந்தப்பட்ட ஓட்டுனர் பார்வை 1ல் காணும் மனுவின் மூலம் கோரியதின்பேரில், மேற்படி டிராக்டருக்கு புதிய இரண்டு டயர்கள், டியப்கள் வாங்கி பொருத்தி கொள்ளவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.12500/—க்கும், அவசர அவசியம் கருதி, நேரடியாக விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | இரண்டு முன்பக்க டயர்கள், டியுப்களின் விலை |
|---|---|---|
| 1 | உரிமையாளர்,<br>ஸ்ரீ பாக்கியலட்சுமி டயர்ஸ்,<br>47இ—6/12, சுண்ணாம்பு ஜீபி,<br>பைபாஸ் ரோடு,<br>ஒசூர் | ரூ.12500/— |
| 2 | உரிமையாளர்,<br>வாசவி ஆட்டோமொபைல்ஸ்,<br>81/1, அம்மன் நகர்,<br>தின்னூர், | ரூ.16520/— |

| | | |
|---|---|---|
| | ஒசூர் | |
| 3 | உரிமையாளர்,<br>சங்கர் டயர்ஸ் மார்ட்,<br>48, என்டிஆர் நகர், இஎஸ்ஐ ரிங் ரோடு,<br>ஒசூர் | ரூ.18500/– |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் உரிமையாளர், ஸ்ரீ பாக்கியலட்சுமி டயர்ஸ், 47இ–6/12, சுண்ணாம்பு ஜீபி, பைபாஸ் ரோடு, ஒசூர் என்பவர் கொடுத்துள்ள குறைவான விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண்.286/2018/எச்1)

தனி அலுவலர்
ஒசூர் நகராட்சி

2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் தேதி திங்கட் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்

தலைமை – திரு.ம.செந்தில் முருகன்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், ஒசூர் நகராட்சி

| பொருள் எண் | தீர்மான எண் | கூட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | 168 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 169 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 170 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 171 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 172 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 173 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 174 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 175 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 176 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 177 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 178 | அனுமதிக்கப்பட்டது |
| 12 | 179 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 180 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 181 | அனுமதிக்கப்பட்டது |
| 15 | 182 | அனுமதிக்கப்பட்டது |
| 16 | 183 | அனுமதிக்கப்பட்டது |
| 17 | 184 | அனுமதிக்கப்பட்டது |
| 18 | 185 | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 186 | அங்கீகரிக்கப்பட்டது |
| 20 | 187 | அனுமதிக்கப்பட்டது |
| 21 | 188 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 22 | 189 | அனுமதிக்கப்பட்டது |
| 23 | 190 | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 191 | அனுமதிக்கப்பட்டது |
| 25 | 192 | அனுமதிக்கப்பட்டது |
| 26 | 193 | அனுமதிக்கப்பட்டது |
| 27 | 194 | அங்கீகரிக்கப்பட்டது |

(ஒம்) எம்.செந்தில் முருகன்
தனி அலுவலர்
ஒசூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஒசூர் நகராட்சி